# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1851/23 - 2014 පෙබරවාරි මස 26 වැනි බදාදා - 2014.02.26

*1851/23 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திச் செயல்திட்டங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட காணியானது நகர அபிவிருத்திச் செயல்திட்டத்திற்கு உடனடியாகத் தேவைப்படுவதனால் குறிப்பிட்ட காணி அப்படியான நோக்கத்திற்குத் தேவையென இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2014, பெப்புருவரி 19.*

***அட்டவணை***

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லையுள்ளான வட்டாரம் 37, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ளதும், பதிவு செய்யப்பட்ட உத்தரவுபெற்ற நில அளவையாளரும், நீதிமன்ற ஆணையாளருமான திரு. டி. டி. சி. ஹீன்தெனியா என்பவரால் 2006, சனவரி 27 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட மாதிரிப்பட இல. : 2775 இல் காட்டப்பட்ட காணித்துண்டு இல. 2 இனது விஸ்தீரணம் 0.2205 ஹெக். ஆனது மதிப்பீட்டு இல. 106 மற்றும் இல. 106 A இணைக் கொண்டுள்ளது :-*

*வடக்கு : மதிப்பீட்டு இல. 98, கொள்ளுப்பிட்டி வீதி ;*
*கிழக்கு : கொள்ளுப்பிட்டி வீதி மற்றும் மதிப்பீட்டு இல. 108, கொள்ளுப்பிட்டி வீதி ;*
*தெற்கு : மதிப்பீட்டு இலக்கங்கள் 108, 112, கொள்ளுப்பிட்டி வீதி ;*
*மேற்கு : காணித்துண்டு இல. 1.*

*3- 311*